# திராவிடர் கழகம் நமக்கான இயக்கம்

**தி**ராவிடர் கழகம், நாட்டில் நம்முடைய சமுதாய மக்களுக்கே பாடுபடும் ஒரு ஸ்தாபனமாகும்.

காங்கிரசை எடுத்துக் கொண்டால் அது எல்லா மத மக்களுக்கும் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறது. ஆனால், அந்தக் காங்கிரசில் செல்வாக்குப் பெற்றுள்ளவர்களும், பொருள் பயனும் லாபமும் பெறுபவர்களும் பார்ப்பனர்கள்தான். காங்கிரசிலே உள்ள நம்மவர்களெல்லாம் பார்ப்பனர்களுக்கு கைக்கூலியாக இருக்கின்றார்களே தவிர, வேறில்லை. மற்றும் இந்த நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி என்று தங்களை அழைத்துக் கொள்ளும் கட்சியினரும் பார்ப்பனரின் ஏஜெண்டாகவே இருக்கின்றார்கள். அதனால்தான் நம் மக்களுக்காகவே, ஒரு ஸ்தாபனம் தேவை என்பதன் அவசியத்தைக் குறித்துத்தான் திராவிடர் கழகம் ஏற்பட்டிருக்கிறது.

இக்கழகத்துக்காக ஏற்பட்டுள்ள இந்தக் கொடியிலேயே நம் சமுதாயத்திலுள்ள இழிவைக் குறிக்கும் அறிகுறியாக கறுப்பு நிறத்தை வைத்துள்ளோம். நமது இழிவு ஒழிந்தவுடன் நமது கொடியும் மாறும். நீங்கள் திராவிடர் கழகத்தின் கொள்கைகளை நன்கு உணர்ந்து அதற்குத் தகுந்தபடி நடக்க வேண்டும்.”

*- “விடுதலை” (9.5.1954)*